### ஒரு பதில் தீர்மானம் எடுப்பவர் என்றால் என்ன?

உங்களால் தீர்மானம் செய்ய முடியாத நிலையில், உங்கள் சார்பில் தீர்மானம் எடுப்பவராவர்.

### எவர் ஒரு பதில் தீர்மானம் எடுப்பவராக இருக்க முடியும்?

நீங்கள் விரும்பும் எவரையும் உங்கள் பதில் தீர்மானம் எடுப்பவராக எவ்வளவுக்கு அவர்கள் முழுமனதுடன் உங்கள் சார்பில் செயற்பட இயலும் என்பதைப் பொறுத்துத் தெரிவு செய்ய முடியும். எவ்வாறு ஆயினும் எவராவது 16 வயதுக்குட்பட்ட ஒருவர் மனோநிலை ரீதியில் செயற்பட முடியாத ஒருவர் எவராவது உங்களைக் பராமரிப்பதற்காகக் கொடுப்பனவு பெற்ற ஒருவர், இந்நபர் உங்கள் வாழ்கைத்துணை அல்லது உறவுக்காரர் இல்லாவிடில் நீங்கள் தெரிவு செய்ய முடியாது.

### ஒரு பதில் தீர்மானம் எடுப்பவர் செய்ய வேண்டியது என்ன?

பதில் தீர்மானம் எடுப்பவர் உங்களால் செய்ய முடியாத பராமரிப்புக்கான உங்கள் விருப்புகள், திட்டங்கள் ஆகியவை மதிக்கப்பட்டன என்பதை நிச்சயப்படுத்துவதற்காக உங்கள் சார்பில் செயல்படுகின்ற பொறுப்பாளராவார். உங்களுக்கு ஒரு வைத்தியரால் அல்லது வேறு சுகாதார பராமரிப்புத் தொழில் செய்பவரால் சிகிச்சை செய்வதற்கு முன்பே சம்மதத்தைப பெறுவதற்காக, அவர் / அவளை தொடர்பு கொள்ளப்படல் வேண்டும். ஒரு சுகாதார பராமரிப்புத் தொழில் செய்பவர் உங்களுக்கு ஒரு அவசரகால சிகிச்சை செய்ய வேண்டிய போது அவருக்கு உங்கள் விருப்புகள் தெரியாவிட்டாலும், இது (சம்மதம் பெறல்) தவிர்க்கப்படலாம்.

தாபனம்

மிசிசாகா, கோல்ட்டன் உள்ளூர் சுகாதார கூட்டு வலையமைப்பின ஒரு அங்கத்தவர்

இவ் ஆவணமானது பணியாளர் நோயாளர் வதிவிடவாளர் மற்றும் அவர்களக்குப் பதிலாக தீர்மானம் எடுப்பவர்கள இந்த முன்னேற்பாட்டு பராமரிப்புத்திட்டங்களை அறியக் கூடிய வகையில் வடிவமைக்கப்பட்ட வழிகாட்டுதல் களைஉள்ளடக்கியுள்ளது.இதில்சட்டங்களில்பிரயோகிக கத் தக்க ஒவ்வொரு விருப்பமும் அடங்கவில்லை.இது சட்ட ஆலோசனையாகக் கருதக்கூடியதல்ல. சில சட்டத்தின் சட்டக்குறியீடுகள் எளிதான சொற்களில் இலகுவாக விளங்கக்கூடியவாறு இதில் விபரிக்கப பட்டுள்ளன.

# மாற்றுத் தீர்மான முடிவெடுத்தல்

## தனிப்பட்டவரின் பராமரிப்புக்கான சட்டபூர்வமான அதிகாரப்பிரதிநிதி

**தனிப்பட்டவரின் பராமரிப்புக்கான மாற்றுத்தீர்மான முடிவெடுத்தலுக்குரிய ஒரு துரித வழிகாட்டி**



Funded by the Mississauga Halton Local Health Integrated Network

*adapted from the Central-West Local Health Integrated Network Initiative*

. பதில்தீர்மானம் எடுப்பவரை நியமிக்கவில்லை யென்றால் என்ன நடக்கும்?

இப்படியான சூழ்நிலையில், சுகாதார பராமரிப்பு தொழில் நடத்துபவர்களுக்கு மாற்றாக மக்களின் பிரதிநிதிகளைப் போல அதிகாரமுள்ளவர்கள் சுகாதார தீர்மானங்களை எடுக்க சட்டம் வழிகாட்டுகின்றது.

அவர்கள் கீழ்வருமாறு:–

- நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட பாதுகாவலர்
- தனிப்பட்டவரின் பராமரிப்புக்கான சட்டப்படியான தத்துவக்காரர்
- இணக்க ஆற்றல் சபையினால் நியமிக்கப்பட்ட பாதுகாவலர்
- உங்கள் வாழ்கைத்துணை, வழமைச் சட்ட வாழ்கைத்துணை, அல்லது பங்காளர்
- உங்கள் பிள்ளை (16 வயது அல்லது அதற்கு மேல்) அல்லது பெற்றோர்
- அணுகும் உரிமையுள்ள உங்கள் பெற்றோர்
- உங்கள் சகோதரர் அல்லது சகோதரி
- இரத்த உறவு, திருமணம் அல்லது தத்தெடுத்தலினால் உள்ள வேறு எவராவது உறவுக்காரர்
- பொதுப்பாதுகாவலர், தர்மகர்தாவுக்கான காரியாலயம்

தனிப்பட்டவரின் பராமிபிப்புக்கு ஒரு சட்டப்படியான தத்துவம் என்றால் என்ன?

தனிப்பட்டவரின் பராமிபிப்புக்கு ஒரு சட்டப்படியான தத்துவம் என்றால், நீங்கள் உங்கள் பதில் தீர்மானம் எடுப்பவரை உங்களின் தனிப்பட்ட பராமரிப்பு சார்பான சகலத்துக்கும் பொறுப்பாக அவனை / அவளை நியமனம் செய்யும் ஒரு ஆவணமாகும். இது சுகாதாரக் பராமரிப்பு, போசாக்கு, சுகாதாரம் தனிப்பட்ட பாதுகாப்பு, உடை, உறைவிடம் ஆகியவைகளையும் அடக்கியிருக்கும்.

தனிப்பட்ட பராமரிப்புக்கான ஒரு சட்டப்படியான தத்துவமானது ஒரு முன்னேற்பாட்டு பராமரிப்புக் கட்டளை / உயில் போன்றதை ஒத்ததா?

இல்லை, அவைகள் ஒத்தவைகளல்ல. முன்னேற்பாட்டுக் கட்டளைகள் அல்லது உயிர் உயில்கள் ஆனவை, ஒரு நபர் அவனது / அவளது எதிர்காலக் பராமரிப்பு திட்டங்கள் பற்றிய அபிலாஷைகளை தெரியப்படுத்தக் கூடிய வகையில் எழுதப்படும் ஆவணங்களாகும். இந்த ஆவணங்களில் ஒரு பதில் தீர்மானம் எடுப்பவரைக் குறிப்பிட வேண்டியதில்லை. அப்படியிருப்பினும் ஒரு நபர் பதில் தீர்மானம் எடுப்பவர் என ஒருவரின் பெயரைக் குறிப்பிட்ட தனிப்பட்ட பராமரிப்புக்கு ஏற்புடைய <u>சம்பிரதாயமானதாக</u> ஒரு சட்டப்படியான தத்துவமாக இருந்தால் அதை அதன்படி கருதவேண்டும்.

. தனிப்பட்ட பராமரிப்புக்கு, ஒன்றுக்கு மேற்பட்ட சட்டப்பிரதிநிதி பெறுவது சாத்தியமா?

உங்கள் தனிப்பட்ட பராமரிப்புக்காக ஒன்றுக்கு மேற்பட்ட சட்டப்பிரதிநிதி அல்லது வேறுபட்ட வகையான பராமரிப்புத் தீர்மானங்களுக்கென, வேறு வேறான சட்டப்பிரதிநிதிகளையும் பெறுவதற்கான தெரிவுகளையும் நீங்கள் செய்யலாம். உங்களுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பிரதிநிதிகள் இருந்தால், தீர்மானங்களைக் கூட்டாக எடுக்கலாம் அல்லது தீர்மானங்களைத் தனித்தனியாகவும் எடுக்க முடியும். வேறு வகையான தனிப்பட்ட பராமரிப்புத் தீர்மானங்களை எடுப்பதற்காக, வேறு வேறான சட்டப்பிரதிநிதிகளை நியமித்த சூழ்நிலையில், ஒருவர் உறைவிடம் பற்றியும், மற்றவர் சுகாதார பராமரிப்பு போன்றவை பற்றியும் தீர்மானங்கள் எடுக்க முடியுமாயிருக்கும் ஒரு மாறுபட்ட அல்லது புறஉதவி பதில் தீர்மானம் எடுப்பவரின் நியமனம் பயனள்ளதாய் முடியுமாகிலும், முதலாவது நபரான அவன் / அவள் அங்கே உங்களுக்காக செயற்பட முடியாத சூழ்நிலையில் இருக்க வேண்டி வரும்.

. தனிப்பட்ட பராமரிப்புக்காக ஒரு சட்டப்படியான தத்துவத்திற்கு நியமனம் செய்வதற்கான முறை என்ன?

தனிப்பட்ட பராமரிப்பு தேவைகளுக்கான ஒரு சட்டப்படியான தத்துவமானது எழுத்து மூலமான ஆவணமாக உங்களால் கையொப்பமிட்டு, திகதியிட்டு, இரு நபர்களால் சாட்சியமிடப்பட வேண்டும். அதைப் பூரணப்படுத்தும் சமயத்தில், நீங்கள் அந்த ஆவணத்தில் உள்ளவற்றை விளங்கிக் கொள்ள முடியுமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன், நீங்கள் தொடர்ந்து உங்களால் உங்களால் தேவைகளைச் செய்ய முடியாத சமயத்தில், அந்த ஆவணத்தில் நீங்கள் குறிப்பிட்ட நபர், உங்களுக்காக தனிப்பட்ட பராமரிப்புத் தீர்மானங்களை எடுத்தல் வேண்டும்.

மேலதிக வசதிகள்
முன்னேற்பாட்டு பராமரிப்புத் திட்ட வழிகாட்டி
ஒன்ராரியோ அரசு

உயிருடன் எழுதும் உயில்
ரொறொன்ரோ பல்களைக்கழகம் கூட்டு மையம்(Bioethics)
www.utoronto.ca/jcb

என்னைத் தீர்மானிக்க விடு
D.W.Molloy, 2004

பொதுபாதுகாவலரும் அறநிலை யாளர் அலுவலகமும்
www/attorneygeneral.jus.gov.on.ca

முதியோர் சட்ட ஆலோசக மையம்
www. advocacycentreelderly.org

சம்மத சட்டபூர்வ அனுமதி சபை
www.ccboard.on.ca

ஒன்ராரியோ சுகாதர பராமரிப்பு சம்மத சட்டம்
www.e-laws.gov.ca/html/statutes/
English/elaws_statutes_96h02_e.htm